C

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | |

நேரம்: 1. 30 மணி

## உயிரியல்

மதிப்பெண்கள்: 50

### உயிரி - தாவரவியல்

மதிப்பெண்கள்: 25

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1. ஆர்க்கி பாக்டீரியம் எது?
அ) அசட்டோபாக்ட்ர் ஆ) எர்வினீயா இ) டிரிப்போனிமா ஈ) மெத்தனோ பாக்டீரியம்
2. தாவரவியலின் தந்தை என அழைக்கப்படுபவர்?
அ) கரோலஸ் லின்னேயஸ் ஆ) மெண்டல் இ) தியோஃபிராஸ்டஸ் ஈ) கார்ல் வோய்ஸ்
3. ஜிம்னோஸ்பெர்ம்களில் கருவூண்திசு உருவாவது?
அ) கருவுறுதலின்போது ஆ) கருவுறுதலுக்கு முன்
இ) கருவுறுதலுக்குப் பின் ஈ) கருவளரும் போது
4. வாஸ்குலத்திசுகளற்ற பூவாத் தாவரங்கள் .......... ஆகும.
அ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள் ஆ) டெரிடோஃபைட்டுகள்
இ) பிரையோஃபைட்டுகள் ஈ) ஜிம்னோஸ்பெர்ம்கள்
5. கீழ்க்கண்டவற்றில் பல்காய்ப்புத் தாவரம் எது?
அ) மாஞ்சிஃபெரா ஆ) பாம்புசா இ) மியூசா ஈ) அகேவ்

### பகுதி - ஆ

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி:** 3×2=6

6. ஹோமியோமிரஸ் (ம) ஹெட்டிரோமிரஸ் லைக்கன்களை வேறுபடுத்துக.
7. மழைக்குப் பின் மண்வாசனை ஏற்படக் காரணம் யாது?
8. பிளக்டோஸ்டீல் என்றால் என்ன? எ.கா. தருக.
9. பூஞ்சை வேரிகள் என்றால் என்ன?
10. வேரின் முதல் நிலை பணிகளை எழுது.

### பகுதி - இ

**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வினா எண் 13 கட்டாய வினா:** 3×3=9

11. மொனிராவின் சிறப்பு பண்புகளை எழுதுக.
12. பாசிகளில் பசுங்கணிகத்தின் வடிவம் தனித்துவம் வாய்ந்தது எனக் கருதுகிறாயா? உனது விடையை நியாயப்படுத்துக.
13. வேரின் பகுதிகளை படம் வரைந்து பாகங்களை குறி.
14. வைரஸ்களின் உயிருள்ள (ம) உயிரற்ற பண்புகளை எழுதுக.
15. லைக்கன்களின் பொதுப்பண்புகளை எழுதுக.

### பகுதி - ஈ

**III. விரிவான விடையளி:** 1×5=5

16. அ) கிராம் சாயமேற்றும் முறையின் படிநிலைகளை எழுது. (அல்லது)
ஆ) ஆஞ்சியோஸ்பெர்ம்களுக்கும், ஜிம்னோஸ்பெர்ம்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை எழுதுக.

## *உயிரி - விலங்கியல்*

*மதிப்பெண்கள்: 25*

### பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 5×1=5**

1. பல்லுயிர்த்தன்மை என்ற பதத்தைச் சூட்டியவர் யார்?
   அ) வால்டர் ரோஸன் ஆ) எ.ஜி.டான்ஸ்லே
   இ) அரிஸ்டாடில் ஈ) எபி.டி.கா
2. நான்கு அறை இதயம் இதில் காணப்படும்
   அ) பல்லி ஆ) பாம்பு இ) தேள் ஈ) முதலை
3. குறு இழை கொண்ட எபிதீலியம் காணப்படும் இடம்
   அ) தோல் ஆ) செரிப்புப் பாதை இ) பித்தப்பை ஈ) மூச்சுக்குழல்
4. எதில் திறந்தவகை சுற்றோட்ட மண்டலம் காணப்படுகின்றன?
   அ) கரப்பான்பூச்சி ஆ) புறா இ) மண்புழு ஈ) தவளை
5. கீழ்வருவனவற்றுள் எது கல்லீரலின் பணியல்ல
   அ) இன்சுலின் உற்பத்தி ஆ) நச்சு நீக்கம்
   இ) கிளைக்கோஜன் சேமிப்பு ஈ) பித்தநீர் உற்பத்தி

### பகுதி - ஆ

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3×2=6**

6. கோவேறு கழுதை ஏன் மலட்டுத் தன்மை உடையதாக உள்ளது?
7. சுடர் செல்கள் என்றால் என்ன?
8. சிலவகை எபிதீலியங்கள் பொய்யடுக்கினால் ஆனவை. இதன் பொருள் என்ன?
9. மண்புழுக்கள் எவ்வாறு சுவாசிக்கின்றன?
10. சிற்றினக் கோட்பாட்டில் சார்லஸ் டார்வினின் பங்கு யாது?

### பகுதி - இ

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. வினா எண் 13 கட்டாய வினா: 3×3=9**

11. பயன்தரும் பாக்டீரியாவை நோயூக்கி பாக்டீரியாவிலிருந்து வேறுபடுத்துக.
12. பெரும்பாலான விலங்குகளில் காணப்படும் நான்கு பண்புகளை குறிப்பிடுக.
13. தவளையின் செரிமான மண்டலத்தை படம் வரைந்து பாகங்களை குறிக்கவும்.
14. சிறுகுடலில் மட்டும் உறிஞ்சுகள் உள்ளன? ஏன் இரைப்பையில் இல்லை?
15. பழுப்பு அடிப்போஸ் திசு என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?

### பகுதி - ஈ

**IV. கீழ்வரும் வினாவிற்கு விடையளி: 1×5=5**

16. முதுகு நாணுடையவை மற்றும் முதுகு நாணற்றவை இடையேயுள்ள வேறுபாடுகளை எழுதுக.

    **(அல்லது)**

    எபிதீலியம் என்றால் என்ன? அதன் பல்வேறு வகைகளின் பண்புகளைத் தருக.

---------